(6 pages) **Reg. No. : ......................**

**Code No. : 30152** **Sub. Code : J 1 TL 41/ S 1 TL 41**

B.A./B.Sc. (CBCS) DEGREE EXAMINATION, APRIL 2019.

Fourth Semester

Part I – Tamil

பொதுத்தமிழ் – தாள் IV

(For those who joined in July 2016 onwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. 'கூறியது மறாஅமை' என்னும் தொடர் உணர்த்துவது யாது?

   (அ) அன்பு

   (ஆ) பண்பு

   (இ) அறிவு

   (ஈ) செறிவு

2. நும் பாடப்பகுதியிலமைந்த பதிற்றுப்பத்துப் பாடலின் பாட்டுடைத் தலைவன் யார்?

   (அ) சேரன் செங்குட்டுவன்

   (ஆ) பெருஞ்சேரல் இரும்பொறை

   (இ) வில்லவன் கோதை

   (ஈ) பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

3. யானைக்குட்டியின் மரபுப்பெயர் யாது?

   (அ) யானைப்பறழ் (ஆ) யானை மறி

   (இ) யானைக்கன்று (ஈ) யானைப்பார்ப்பு

4. 'பட்டினம்' என்னும் பகுதி எத்திணைக்குரியது?

   (அ) குறிஞ்சி (ஆ) முல்லை

   (இ) மருதம் (ஈ) நெய்தல்

5. சோழநாட்டின் வணிகச்சிறப்பை எடுத்துக்கூறும் நூல் எது?

   (அ) மலைபடுகடாம் (ஆ) பட்டினப்பாலை

   (இ) சிறுபாணாற்றுப்படை (ஈ) குறிஞ்சிப்பாட்டு

6. ஆறு மாதங்களுக்கு மாலையிலும், ஆறு மாதங்களுக்கு விடியற்காலையிலும் காணப்படும் விண்மீன் எது?

   (அ) செவ்வாய் (ஆ) புதன்

   (இ) வியாழன் (ஈ) வெள்ளி



*Nesamony Memorial Christian College, Marthandam*

7. நிலத்தை விற்பது தொடர்பாக, தந்தை எந்த ஊருக்குச் சென்றிருப்பதாக நித்யா பழனியிடம் கூறினாள்?

(அ) திருச்சி (ஆ) மதுரை

(இ) துறையூர் (ஈ) சேலம்

8. "கீழாநெல்லிச்சாறு மஞ்சள்காமாலைக்குக் கைகண்ட மருந்து" - இது யார் கூற்று?

(அ) கோபால்

(ஆ) சரஸ்வதி

(இ) கண்ணுச்சாமி

(ஈ) சிவா

9. கீழ்க்கண்ட நூல்களில் எட்டுத்தொகை நூல் எது?

(அ) திருமுருகாற்றுப்படை

(ஆ) குறிஞ்சிப்பாட்டு

(இ) புறநானூறு

(ஈ) நெடுநல்வாடை

10. நற்றிணை எத்தனை பாடல்களைக் கொண்ட நூல்?

(அ) 100 (ஆ) 200

(இ) 300 (ஈ) 400



பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 250 சொற்களில் விடை தருக.

11. (அ) தலைவனின் கூற்றில் அமைந்த குறுந்தொகைப் பாடலின் நயத்தினை விளக்குக.

(அல்லது)

(ஆ) குன்றியனாரின் நற்றிணைப் பாடல் தரும் அகச் செய்திகளை எடுத்துரைக்க.

12. (அ) கீழ்வரும் பிறமொழிச் சொற்களுக்குத் தகுந்த தமிழ்ச்சொற்களைத் தருக.

(i) அக்கவுண்டண்ட்

(ii) ஈமெயில்

(iii) கும்பாபிஷேகம்

(iv) மதுரம்

(v) ஆசாமி

(அல்லது)

(ஆ) கரந்தைத்திணை - குறிப்பு வரைக.

13. (அ) 'மனித நேயமே முதல் மதம்' - விளக்குக.

(அல்லது)

(ஆ) பண்டைத் தமிழரின் வாணியற் புலமையை எடுத்துரைக்க.



Nesamony Memorial Christian College, Marthandam

14. (அ) 'உறவுப்பின்னல்கள்' என்னும் நாடகத்தின் கருவினை விளக்குக.

(அல்லது)

(ஆ) 'அழுக்குப்படாத அழகு' என்னும் நாடகத்தில் வரும் திவ்யா - தினேஷ் ஆகியோரின் திருமணம் தடைபடக் காரணம் யாது?

15. (அ) நெடுநல்வாடை - குறிப்பு வரைக.

(அல்லது)

(ஆ) குறிஞ்சிப்பாட்டு பற்றிக் கூறுக.

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் 600 சொற்களுக்கு மிகாமல் விடையளி.

16. (அ) பாசறையில் நடைபெறும் செயல்களை முல்லைப்பாட்டு எவ்விதம் எடுத்துரைக்கிறது?

(அல்லது)

(ஆ) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறையை அரிசில்கிழார் எவ்வாறு வாழ்த்துகிறார்?



17. (அ) அன்பின் ஐந்திணைகளின் முதல், கரு, உரிப் பொருள்களைத் தருக.

(அல்லது)

(ஆ) தும்பை, வாகை, பாடாண் ஆகிய திணைகளை விளக்குக.

18. (அ) சோழர் காலத்தில் 'ஊர்' என்னும் சொல்லாட்சி பற்றிக் கட்டுரை வரைக.

(அல்லது)

(ஆ) அறிவியல் வளர்ச்சி பற்றியும் சிதைவடையும் வாழ்க்கை பற்றியும் ஆராய்க.

19. (அ) 'நடைபாதை நம்பிக்கை நட்சத்திரங்கள்' என்னும் நாடகத்தில் வரும் அழகம்மாளின் பண்புநலன்களை மதிப்பிடுக.

(அல்லது)

(ஆ) 'அழுக்குப்படாத அழகு' என்னும் நாடகத்தின் பாத்திரப்படைப்புகளை ஆராய்க.

20. (அ) சங்க இலக்கியங்களின் சிறப்புகளை ஆராய்க.

(அல்லது)

(ஆ) எட்டுத்தொகையில் காணப்படும் அகநூல்கள் பற்றி விளக்குக.

---



Nesamony Memorial Christian College, Marthandam